# தீர்மானம்

கடந்த 150 ஆண்டுகளாகத் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கவேண்டுமென்று பரிதிமாற்கலைஞர் காலந்தொட்டு, பல அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், புலவர்களும் மத்திய அரசினை வலியுறுத்தி வந்த சூழலில், மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் அமைந்த பிறகு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் விடாமுயற்சி மற்றும் தோழமைக் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க தமிழைச் செம்மொழியாக அறிவிப்பு செய்தார்கள். முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, 2004 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் அவர்களின் உரையிலேயே தமிழ்மொழியைச் செம்மொழியாக மத்திய அரசு அறிவிப்புச் செய்தது.

இச்சூழலில் நேற்று 30.1.2008 அன்று பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சென்னையில் 17 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் எழுப்பப்படும் கட்டிடத்தில் ரூ.76.32 கோடி செலவில் தமிழகத்தில் "செம்மொழித் தமிழ் ஆய்வு மையம்" அமைத்திடவும், இவ்வாய்வு மையத்தின் தலைவராக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பு வகிப்பார் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்முடிவினை எடுத்த மத்திய அமைச்சரவைக்கும், பாரதப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், இவற்றிற்கு உறுதுணையாக இருந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்களுக்கும், மற்றும் மத்திய அமைச்சர் மாண்புமிகு அர்ஜூன் சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், இத்தகைய வெற்றிக்கு முழுமுதற் காரணமாக இருந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் இப்பேரவை பாராட்டுதல்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறது.